காலாண்டுத் தேர்வு - 2022

மாதிரி வினாத்தாள் (1)

பத்தாம் வகுப்பு பகுதி - I நேரம்: 3:00 மணி

தமிழ் மதிப்பெண்கள்:100

## சரியான விடையைத் தெரிவு செய்க. 15 × 1 = 15

1.காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் ' நிலத்துக்கு நல்ல உரங்கள் . இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது .

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ ) சருகும் சண்டும்

2.அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது -

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

2.அருந்துணை என்பதைப் பிரித்தால் __________

அ)அருமை + துணை ஆ)அரு + துணை இ)அருமை + இணை ஈ)அரு +இணை

3.தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது______

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

4. "பெரிய மீசை சிரித்தார்" இச்சொல்லின் தொகை வகை யாது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்னதொகை

5. காசிக் காண்டம் என்பது

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தை குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமை பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

6. எய்துவர் எய்தாப் பழி இக்குரலடிக்கு பொருந்தும் வாய்ப்பாடு எது?

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள் இ)தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

7 எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

8. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) குலா இ) சீலா ஈ) இலா

9. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ________ இடைகாடனாரிடம் அன்பு வைத்தவர் _____ .

அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

10 ஐம்பெருங்காப்பியங்களுள் பொருந்தாததைத் தேர்க.

அ) யசோதர காவியம் ஆ) சிலப்பதிகாரம்

இ) மணிமேகலை ஈ) சீவக சிந்தாமணி

11. குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டம்மா என்று ஆண் தெய்வத்தை அழைத்து பாடுகிறார். பூனையார் பால் சோற்றை கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி -

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) காலவழுவமைதி, இட வழுவமைதி

பாடலைப் படித்து பின் வரும் வினாக்களுக்கு விடைதருக.

மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை
மயிலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா;
இலைகளின்மீதும், நீரலைகளின்மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண - ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.

12. இப்பாடலின் ஆசிரியர் யார்? அ) பாரதிதாசன் ஆ) கம்பர் இ) பாரதியார் ஈ) கண்ணதாசன்
13. மயிலுறுத்து பொருள் தருக. அ) உயிர்வளி ஆ) சீராக இ) மயங்கச்செய் ஈ) தென்றல்
14. இப்பாடலுக்கு தலைப்பு இடுக.
15. காற்று எவ்வாறு வருகின்றது என்கிறார்?

பகுதி II (மதிப்பெண்கள் 18)

பிரிவு - 1

ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடை விடை அளிக்கவும். 21வது வினாவிற்கு கட்டாயமாக விடை அளிக்கவும். 4 × 2 = 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
 அ) சங்க காலங்களில் அரசனுக்கு அறநெறி கூற அறங்கூறும் அவையம் இருந்தது.
 ஆ) கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்.
17. வசன கவிதை குறிப்பு வரைக.
18. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
19. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச்சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள் கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
20. செய்குத்தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக எழுதுக?
21. 'விடும்' என்று முடியும் குறளினை எழுதுக.

பிரிவு - 2

ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும். 5 × 2 = 10

22. அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழ க வைத் திறந்தார்.
(தனிச் சொற்றொடர்களைக் கலவை ச் செ ற்றொடர்களாக மாற்றுக)

23. இரு சொற்களையும் ஒரே தெ டரில் அமைத்து எழுதுக.
 அ) சிறு - சீறு ஆ) தொடு - தோடு

24. தொடர்களில் உள்ள எழுவாயை செழுமை செய்க.
 அ) கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.
 ஆ) வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

25. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக: அ) கும்பகோணம் ஆ) மன்னார்குடி

26. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக
 அ) அள்ளி இறைத்தல் ஆ) மனக்கோட்டை

27. கலைச்சொற்கள் தருக. அ) Myth ஆ) Symbolism

28. வேர்ச்சொல்லைப் பயன்படுத்தி எழுவாய்த் தொடர் , வினையெச்சத் தொடர், விளித்தொடர் ,வேற்றுமைத் தொடர் அமைக்க. அ) பார்

பகுதி - **III ( மதிப்பெண்கள்: 18)**

பிரிவு 1

**இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். 2 × 3 = 6**

29. **உரை பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள்கள் அதிரடியாக பல கே டி காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும் படியாக தொடர்ந்து மழை பொழிந்த ஊழி காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாக ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் ஆகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலை பெறும்படியாக இப்புவியில் ஊழிக் காலம் கடந்தது.

அ) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் ஆக நீவீர் கருதுவன யாவை?

ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?

இ இப்பகுதியில் உள்ள அடுக்கு தொடர்களை எழுதுக

30. அ) ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

ஆ) ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

இ) ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்காண காரணத்தை எழுதுக.

31. விருந்தினரை மகிழ்வித்து கூறும் முகமன் சொற்களை எழுதுக.

பிரிவு - 2

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும் 34-வது கட்டாய வினா. 2 × 3 = 6**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுற்றும் செய்தியை விளக்குக.

34. **"தண்டலை"** என தொடங்கும் கம்பராமாயண பாடலை அடிபிறழாமல் எழுதுக. (அல்லது) **"வாளால்"** என தொடங்கும் பெருமாள் திருமொழி பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு - 3

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும். 2 × 3 = 6**

35. தோட்டத்தில் மல்லிகை பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடு மாடுகளுக்கு தண்ணீர் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர் கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

36. முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

37. இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது இக் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்ப்பாடு தருக.

பகுதி - **IV** (மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும். 5 × 5 = 25**

38. **நயங்களைப் பாராட்டி எழுதுக.**

மலர்ந்தும் மலராத பாதி மலர் போல
வளரும் விழி வண்ணமே வந்து
விடிந்தும் விடியாத காலை பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளம் தென்றலே - வளர்
பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

39. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில்

வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது) உணவு பாதுகாப்பு ஆணையருக்கு புகார் கடிதம் எழுதுக.

40 காட்சியை கவினுற எழுதுக.



41. நூலக உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. தமிழாக்கம் செய்து எழுதுக.

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature he Marut am region was the fit for cultivation ,as it had the most fertile lands .The prosperity of a farmer depended o getting h nece sary sunlight ,seasonal rains and the fertility of the soil . Among these elements of nature ,sunlight was c nsidere dispensable by the ancient Tamils .

Ju

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடை அளிக்கவும். 3 × 8 = 24**

43.அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்கு செவி சாய்த்த நிகழ்வை ந த்துடன் எழுதுக.
(அல்லது) ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

44 அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொ ருத்தப்பாட்டை கோபாலபுரத்து மக்கள் கதைப் பகுதியை கொண்டு விவரிக்க. (அல்லது)
ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற் ான தே வ குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

45. அ) சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
(அல்லது
ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசு பொருட்க ட்சி க்கு சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக.

ஞா.ஜோ.அந்தோனி பிரகாஷ்,
இளநிலை பட்டதாரி ஆசிரியர்,
தொன் பே ஸ்கோ மேல்நிலைப்பள்ளி,
மதுரை.